# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

## Student Organization of Liberation Tigers

SOLT (U.K.)

SOLT (U.K.)

(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX) 0325

**ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் சதித்திட்டம் அம்பலம். புலிகள் மேற்கொண்ட ஆயுதப் பறிப்பு நடவடிக்கை.**

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இஸ்லாமியத் தமிழ் மக்கள் மீது அநீதியையும் தாங்கொணாத் துன்பத்தையும் விளைவித்து வந்ததாலும் எமது விடுதலை இயக்கத்தை ராணுவ ரீதியாக அழித்து இயக்கத்தின் முக்கிய தளபதிகளைக் கொலை செய்வதற்கு சதித் திட்டம் தீட்டியதாக ஆதாரபூர்வமாக சான்றுகள் கிடைத்ததாலும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு எதிராக நாம் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இதனால் உயிர்ச் சேதத்தைத் தவிர்த்து இந்த அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களை நிராயுதபாணிகள் ஆக்கியுள்ளோம். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல தளங்களிலும் உள்ள நூற்றுக் கணக்கான ஈபிஆர்எல்எவ் உறுப்பினர்கள் தமது ஆயுதங்களை ஒப்படைத்து தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ளனர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கிழக்கு மாகாணத்தில் புரிந்து வந்த அட்டூழியச் செயல்கள் காரணமாக இஸ்லாமியத் தமிழ் மக்கள் ஆத்திரமும் வேதனையும் கொண்டிருந்தனர். சிங்கள பேரினவாத அரசு தமிழ் முஸ்லிம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களைப் பிரித்து வேற்றுமை உணர்ச்சியை வித்திட்டு வரும் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் ஈபிஆர்எல்எவ் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் இஸ்லாமியத் தமிழரை துன்புறுத்தி வந்த செயல்கள் மேலும் வேற்றுமைக்கு தூபமிடுவதாக அமைந்தது. அத்துடன் இந்த மக்கள் விரோத நடவடிக்கைகள் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஊறுவிளைவிப்பதாக இருந்தது. இது சம்பந்தமாக நாம் தொடர்ச்சியாக விடுத்த எச்சரிக்கைகளையும் ஈபிஆர்எல்எவ் அமைப்பினர் உதாசீனம் செய்து வந்தனர். இந்த இஸ்லாமிய விரோத நடவடிக்கைகளுக்கு சிகரம் அமைத்தாற் போல திருகோணமலையில் சாம்பல்தீவிற்கும் நிலாவெளிக்கும் இடையில் உள்ள 8ம்கட்டை என்ற கிராமத்தில் இப்ராகிம் என்ற இஸ்லாமிய ஆசிரியரை ஈபிஆர்எல்எவ் உறுப்பினர்கள் கடத்திச் சென்றனர். அவரை விடுதலை செய்யுமாறு அப்பகுதி இஸ்லாமியத் தமிழ் மக்கள் கடையடைப்புகள் ஆர்ப்பாட்டங்கள் நடத்திய போதும் மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் இப்ராகிம் சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவம் இஸ்லாமிய மக்களைக் கொதிப்படையச் செய்தது. இது இவ்வாறு இருக்க கடந்த 10ம் திகதி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இஸ்லாமிய மக்கள் பெரும்பான்மையாக வாழும் பொத்துவில் என்னும் இடத்தில் அவ்வூருக்கு உணவுப்பொருட்களை ஏற்றிச் சென்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறியொன்றை ஈபிஆர்எல்எவ் இனர் கடத்திச் சென்றனர். இச்சம்பவம் இஸ்லாமியத் தமிழர்கள் மத்தியில் பெரும் ஆத்திரத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியது.

இதேவேளை விடுதலைப்புலிகள் இயக்கத்தை ராணுவரீதியாக ஒழித்துக்கட்டவும் இயக்கத்தின் முக்கிய தளபதிகளைக் கொலை செய்யவும் ஈபிஆர்எல்எவ் தலைமைப்பீடம் சதித்திட்டம் தீட்டியது. இது சம்பந்தமாக ஆதாரபூர்வமான சான்றுகள் எம்மிடம் சிக்கியுள்ளன. விடுதலைப்புலிகளின் ராணுவத்தளங்களையும் தகவல் தொடர்பு நிலையங்களையும் ஒரே சமயத்தில் தாக்கி அத்தாக்குதல்களின் போது முக்கியமான தலைவர்களைச் சுட்டுக் கொல்வதென இச்சதியில் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதோடு அல்லாமல் அண்மைக் காலங்களில் ஈபிஆர்எல்எவ் அமைப்பு எமது இயக்கத்திற்கு எதிராக சில ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளது. அண்மையில் நெடுந்தீவு என்னுமிடத்தில் எமது உறுப்பினர்கள் மீது ஈபிஆர்எல்எவ் ராணுவப்பிரிவினர் கைக்குண்டுகளை வீசியும் நிலக்கண்ணிகளை வெடிக்க வைத்தும் தாக்குதலை மேற்கொண்டனர். நாம் சம்பவம் நடந்த இடத்தில் வைத்து எந்த நடவடிக்கைகளையும் எடுக்காமல் மனிதாபிமானமுறையில் யாழ் நகரிலுள்ள அவர்களின் மேலிடத்திற்குச் சென்று இது குறித்து முறையிட்டோம். சமீபத்தில் மன்னாரில் இந்த அமைப்பைச் சேர்ந்தோரின் காட்டிக் கொடுப்பையடுத்து சிங்கள ராணுவத்தினர் நாம் வைத்திருந்த நிலக்கண்ணி வெடிகளை எடுத்துச் சென்றுள்ளனர். இவை மாத்திரமன்றி ஆட்கடத்தல், கொலை, கொள்ளை என்ற ரீதியில் தொடர்ந்தும் தமிழீழமெங்கும் பரவலாக அராஜகச் செயல்கள் புரிந்த ஈபிஆர்எல்எவ் அமைப்பினர் தமிழ் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துள்ளனர். இஸ்லாமியத் தமிழர் உட்பட தமிழீழ மக்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கு இணங்கவே எமது விடுதலை இயக்கம் இந்த அமைப்பின் மீது ஒழுங்கு நடவடிக்கையாக இவர்களை நிராயுத பாணிகளாக்க முடிவு எடுத்தது.

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

**Student Organization of Liberation Tigers**

SOLT (U.K.)

SOLT (U.K.)

(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX) 0323

## புலிகளை அழிக்க ஈ.பி.ஆர்.எல்.எவ் மேற்கொண்ட சதிமுயற்சி பற்றிய ஆதாரங்களை புலிகள் கைப்பற்றினர்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை திடீர் தாக்குதல் மூலம் அழித்து ஒழிக்க சதித்திட்டம் தீட்டிய திட்டம் வெளிப்பட்டுள்ளது. இன்றைய சூழ்நிலையில் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் பத்மநாபா தாம் ரெலோவினருக்கு நச்சம் அளித்ததால் தான் விடுதலைப்புலிகள் தம்மீது தாக்குதல் நடத்தியிருப்பதாக உண்மையை மறைத்து அறிக்கை விடுத்துள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைமையகத்தில் இருந்த (இந்தியா) அமீன் என்பவரால் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் ராணுவப்பிரிவின் 2வது பொறுப்பாளர் சுரேசுக்கு (முதலாவது பொறுப்பாளர் டக்ளஸ் சூளைமேட்டுச் சம்பவத்தினால் சென்னை மத்திய சிறையில் இருக்கிறார்) அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் விடுதலைப்புலிகளை ஈ.பி.ஆர்.எல்.எவ் தாக்கியழிக்கத் தயாரித்த திட்டம் வெளிப்பட்டுள்ளது. சுரேஸ் தற்போது விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு காவலில் உள்ளார். அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கடிதத்தின் முழு விபரம்:-

பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குரிய முயற்சிகளைச் செய்யவும். ஏற்படும் பிரச்சனைகளை உடனுக்குடன் எமக்கு அறியத் தரவும். முக்கியமாக எல்.ரி.ரி.ஈ பற்றிய Received Reply அனுப்பவும்.

1. ஸ்ரொக்கில் உள்ள ஆயுதங்களைக் கைக்கெடுப்பதுடன் அவற்றைத் தயார் நிலையிலும் கொண்டு வரவும். அவற்றை ஒரு இடத்தில் குவிக்காமல் கீழே சொல்லப்படும் குழுக்களிடம் காவிச் செல்லக் கூடிய வசதியுடன் பகிர்ந்தளிக்கவும்.
2. இருக்கும் ஆயுதங்களை இயக்கத் தேவையான அளவு தோழர்களில் மும்மடங்கினை எடுத்து 10பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து அவற்றைத் தலைமை தாங்கக்கூடிய தோழர்களின் கட்டுப்பாட்டில் வைத்து தாக்குதல் போன்றவற்றிற்கான பொதுவான Commanding Codes முறைகளையும் சமிக்ஞைகளையும் செய்யச் சொல்லவும். இக்குழுக்களை மாற்றம் இன்றி தாக்குதலின் போதோ பாதுகாப்பு நடவடிக்கைகளின் போதோ உபயோகித்தல் முக்கியமானது. இக்குழுக்களின் 3பகுதியில் ஒரு பகுதி இயக்க நிலையிலும், ஒரு பகுதி இயங்கத் தயாராக உள்ள நிலையிலும் 3ம் பகுதி சில மணி நேரத்தில் இயங்கத் தயாராக உள்ள நிலைக்கு வரக்கூடிய நிலையிலும் ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வேண்டும். இவர்கள் தமது கடமைகளைக் கடுமையாகச் செய்யலாம்.
3. அவ்வப் பிரதேசங்களில் உள்ள எல்ரிரிஈ இயக்கத்தின் பலத்தையும் அவர்கள் தாக்கக்கூடிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அதற்கான பதில் நடவடிக்கைகளை நாம் எவ்வாறு செய்ய வேண்டும் என்பதனை விசாரித்தல் வேண்டும். அல்லது செறிவான மோட்டார்த் தாக்குதல் அல்லது முக்கிய நபர்களைக் கொல்லுதல் என்பவற்றின் மூலம் இலகுவாக நிறைவேற்றலாம் என்பதனைத் திட்டமிடுக. இதற்கு இக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் நேரத்துடனும், விரைவாகவும், வினைத்திறனாகவும் எப்படியாவது செய்து முடிக்கக் கூடியவர்களாக தெரிவு செய்க.
4. தேவையாயின் இக்குழுக்களை ஒன்று சேர்த்து எல்ரிரிஈ ஏதாவது ஒரு முக்கியமான ஒரு இலக்கின் மீது ஒரு அதிரடித் தாக்குதல் மின்னல் வேகத்தில் முழுப்பலத்துடன் நடத்தக் கூடியவாறு ஒழுங்கு செய்யவும்.
5. பிரதானமாக எல்ரிரிஈ முகாம்களைத் தாக்கி அவைகள் அனைத்தையும் தவிடு பொடியாக முற்றாகச் சிதைத்து விடுவதற்கான தயார் நிலையில் இருக்கவும்.
6. முக்கிய இடங்களில் தொடர்ச்சியான இடங்களைத் தவிர்த்து ஏனைய இடங்களில் மறைவான இடங்களை OP அதாவது அவதானிப்பு நிலையமாக மாற்றி எல்ரிரிஈ தாக்குதல்களை (ஏற்படும் பட்சத்தில்) முன்னறிவிப்படுத்தவும். எல்ரிரிஈயினரின் நடமாடும் இடங்களில் அவர்களது ஒவ்வொரு செயல்களையும் அவதானித்து அவர் மூலமாகவும் அறிய ஏற்பாடு செய்யவும்.
7. காவல் அரண் அல்லது அவதானிப்பு நிலையத்தில் ஒருவராக நிற்பதுடன் முக்கிய ஆயுதங்களைக் கொடுக்காது கைக்குண்டு இரண்டு மட்டும் பாதுகாப்பிற்காக கொடுக்க ஏற்பாடு செய்யவும்.
8. தோழர்களின் திறமை விருப்பம் கட்டுப்பாடாக செயற்பட முடியாதவர்களை தெரிவு செய்ய வேண்டாம்.
9. தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அவர்களுக்கு கொடுக்கப்படும் வேலை முழுமையாகச் செய்யப்படுகிறதா என அவதானித்து அதை எப்படிச் செய்வது என உணர்த்துவதற்கு ஏற்பாடு செய்யவும்.
10. மேலும், ஆயுதங்களுடன் நிற்கும் இக்குழுக்கள் என்ன செய்கின்றன என்பதை இவர்களைத் தவிர பிறருக்குத் தெரியாவண்ணம் ரகசியமாகப் பாதுகாக்கவும். அதன் இவற்றினை உணர்த்தி எவ்வாறு நடத்துவது என தீர்மானித்து ஒரு இறுக்க முறையை ஏற்படுத்திக் கொள்க.

**தமிழினமே! ஊன்றிப் படித்து உண்மையை உணருங்கள்.**

11.தெருக்களில் எல்ரிரிஈயினருடன் தேவையற்ற வாய்ச் சண்டையில் இறங்கி அவர்களுக்கு எம்மைத் தாக்குவதற்கான சந்தர்ப்பத்தை கொடுக்காதிருக்க வேண்டும்.அவ்வாறு காரணம் இன்றித் தாக்குதல் நடத்தினால் எமது அதிரடி நடவடிக்கையை அவர்களின் உயர்திறன் மிக்க இலக்குகளில் உடனடியாக நடாத்தி விட்டு சமாதானத்திற்கு ஏற்பாடு செய்ய முயற்சிக்கவும்.

12.அதிரடித் தாக்குதலை மேற்கொள்ளும் சமயம் எல்ரிரிஈ முகாம்களை எதிரியின் முகாம்களாகக் கருதி அவர்கள் இருக்கும் இடங்களிலேயே தலைமைப்பீடத்துடனான தொடர்புகளை நிலக்கண்ணி மூலம் துண்டிக்கவும்.

13.புலிகளின் ஆதரவாளர்களுக்கும் ஏனைய மக்களுக்கும் எமது நடவடிக்கைகள் தற்பாதுகாப்புக்காகவே என்றும் அவர்கள் புலிகளுக்கு ஆதரவாக நடந்து கொண்டால் அது மோதலை அநாவசியமாக உருவாக்கும் என்ற உணர்வை ஏற்படுத்தி துண்டுப் பிரசுரமோ வேண்டுகோளோ விடுக்க.புலிகள் அமைதியாக இருந்தால் அவர்களைத் தாக்க மாட்டோம் என்பதை மக்களுக்கு விளக்கவும்.ஆயுதமற்ற ஏனைய மக்கள் விடுதலை 'ராணுவத் தோழர்களை (ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ராணுவப் பிரிவினர்)உச்சக் கட்டங்களில் தலைமறைவாகவும் இரகசியமாகவும் இருக்க ஏற்பாடு செய்யவும்.எமது முக்கிய இடங்களை மாற்றவும்.(ரகசியமாக அவ்வாறு முடியாதாயின் அவற்றிற்கு காவல்போட ஏற்பாடு செய்யவும்)

14.ஆயுதமற்ற தோழர்கள் தமக்கு அபாயம் ஏற்படும் பட்சத்தில் பின்வாங்கலாம்.(எதிரியை எதிர் கொள்வது போல)

15.முக்கிய தோழர்கள் தலைமறைவாகவும் பாதுகாப்பாகவும் இருக்க இடங்களை ஏற்பாடு செய்யவும்.

16.அதிரடித் தாக்குதல் நடந்த பின்னர் உடனடியாகச் சமாதானத்திற்கு ஏற்பாடு பண்ணி நாம் சமாதானத்திற்கு விரும்புகிறோம் என்பதை உறுதிப்படுத்தவும்.

17.எல்ரிரிஈயின் முக்கிய இடங்களைப் பற்றி தகவல்களை எடுத்து உயர்திறன் மிக்க இலக்குகளில் அதிரடித் தாக்குதலுக்கு உட்படுத்தக்கூடிய வழிமுறைகளை ஆராய்க.ஏனைய இலக்குகளை கைப்பற்றுவதன் மூலம் எமக்கு ஆதரவான இயக்கங்களை ஏற்க முடியுமா என்பதைப் பார்க்கவும்.

18.மக்களுடன் எமது தொடர்புகள் இயன்றளவு சுலபமாகவும் அதிக மரியாதையுடனும் இருக்கப் பார்த்துக் கொள்ளவும்.முக்கியமாக எமது தோழர்களுக்கு அறிவுறுத்தி கவனத்திற்கு கொண்டு வரவும்.குறிப்பிட்ட தலைமைத் தோழர்களுக்கு கட்டுப்பாட்டுடன் நடக்கும்படி கட்டளை பிறப்பிக்கவும்.தலைமைப் பொறுப்புடன் இயங்கும் தோழர்களுக்கு கண்டிப்புடன் நடக்கும் திட்டங்களைக் கொடுக்கவும்.

<u>மேலதிக ஆயத்தங்கள்:-</u>

1.எல்ரிரிஈக்கும் எமக்கும் பிரச்சினை ஏற்படும் போது சிறீலங்கா ராணுவத்தால் எதிர்த் தாக்குதல் நடைபெறலாம்.அதற்கு மேலதிக ஆயத்தங்கள் ஏற்படுத்தி வைத்திருக்க வேண்டும்.

2.எங்களைத் தாக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் எல்ரிரிஈயினரால் எடுக்கப்படக்கூடாது.அப்படியான நிலைமை உருவாகினால் மோட்டாரைப் பாவித்து தாக்குதல் நடத்துதல் சிறந்ததாகும்.

3.ஒவ்வொரு தாக்குதலின் போதும் அதற்கான தற்பாதுகாப்பு யுக்திகளை பாவித்து நடத்தல் வேண்டும்.

4.எதிரியின் முக்கியமான ஆட்களை முடிப்பதன் மூலம்(கொல்வதன் மூலம்)நிலைகுலையச் செய்யலாம்.

5.அ)எதிரிக்கு எம்மைப் பற்றித் தப்பான கணிப்பீட்டை கொடுப்பதற்கு திட்டமிட்டு செயற்படுதல்.

ஆ)ஆயுதங்கள் இல்லாத இடங்களில் அதிகளவு ஆட்கள் இருப்பது போலவும் இருக்கும் இடத்தில் இல்லாதது போலவும்.

இ)எதிரியை எதிர் நோக்கியிருக்கும் கட்டத்தில் அலட்சியமாக இருப்பது போலவும்.

ஈ)எதிரியுடன் பகைபுணர்வு இருக்கும் காலகட்டத்தில் போலியான நட்புறவை வெளிப்படுத்தல்.

உ)கூடுதலான ரவைகளை(Rounds)பாவிக்காமல் mines ஐ நிலக்கண்ணியை பௌதிக முறையில் பாவித்தல்.

1.இந்த முறையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்க.குறிப்பாக எதிரி புறப்படும் இடங்களிலேயே (முகாமை விட்டு வெளியேறும் போது)கட்டமாக அழித்து விடுவதற்குப் பயன்படுத்தல்.நிலக்கண்ணியையும் மோட்டாரையும் அதிகமாக உபயோகிக்கவும்.

2.குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நிலையான இலக்குகளைத் தாக்கவே மோட்டாரை பயன்படுத்தப் பழகியிருப்பதால் முன்னேறி வரும் ஒரு கட்டத்தை அழிக்கும் முறையில் மோட்டாரைப் பயன்படுத்தச் சொல்லிக் கொடுக்கவும்.

ஊ)ஆயுதம் இல்லாத தோழர்களுக்கும் பிரதானமான வேலைகளைக் கொடுக்கவும்.பிரச்சாரம் கண்காணிப்பு,தொடர்புகள் மற்றும் அன்றாட தேவைகளுக்கும் இவர்களை ஆயுதம் ஏந்திய தோழர்களுக்கு பிரதியீடாக மாற்றுவதற்கு தயார் நிலையில் வைத்திருக்கவும்.

எ)எல்ரிரிஈயின் தகவல் தொடர்பு சாதனம்(Communication)பற்றியும் அவை எங்கெங்கு உள்ளன என்றும் அறியத் தரவும்.அவற்றை முற்றாக அழித்துவிடுவதற்குரிய தயார் நிலையில் இருக்கவும்.

எல்ரிரிஈயுடன் நாம் சமாதானத்தைப் பேணவே விரும்புகிறோம் என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டியது உடனடி நடவடிக்கைகளாகும்.

**தமிழினமே! ஊன்றிப் படித்து உண்மையை உணருங்கள்;**